**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**
**அசல் வழக்கு எண். 652/2021**

**2022–ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் நாள் புதன்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. G. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அய்யாதுரை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : அண்ணாமலை | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : அத்தியூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 68/2022 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

மீனாம்பாள் என் மனைவி ஆவார். மேலும் அவர் எனது அக்கா மகள் ஆவார். (அப்பா) சோனாசலம் என்பவருக்கு பழமலை மற்றும் முத்துலிங்கம் வாரிசுகள் என்றால் சரிதான். பழமலைக்கு (மகன்) சோனாசலம் மற்றும் அண்ணாமலை ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மகன் சோனாசலத்திற்கு அசலாம்பாள் மற்றும் சாலையம்மாள் ஆகிய இரண்டு பெண் வாரிசுகள் என்றால் சரிதான். அசலாம்பாளின் கணவர் பெயர் மகாலிங்கம் என்றால் சரிதான். மேற்படி அசலாம்பாள் மற்றும் மகாலிங்கத்திற்கு மனோரஞ்சிதம் மற்றும் மீனாம்பாள்(வாதி), அமராவதி, துரைராஜ், செல்வராஜ், ஆனந்தராஜ் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. சாலையம்மாளின் கணவர் பெயர் முத்துவேல் என்றால் சரிதான். அவர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லை.

3. அண்ணாமலைக்கு பொன்னுசாமி, சிதம்பரம், அய்யாதுரை மற்றும் ஜெகதாம்பாள், உண்ணாமலை தெய்வமணி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. முத்துலிங்கத்துக்கு வெள்ளிவேல், சின்னசாமி மற்றும் குருசாமி, தெய்வானை வஜ்ரமணி என இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

DMUNUKUNNAM

5. சோனாசலம் (அப்பா) பழமலை, முத்துலிங்கம் ஆகியோருக்கு தாவா சொத்துக்கள் இல்லாமல் வேறு குடும்ப சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இல்லாமல் மேற்படி மூவருக்கும் எத்தனை ஏக்கர் நிலம் இருந்திருக்கும் என்றால் சுமார் 1 ஏக்கர் நிலம் இருந்திருக்கும். அந்த 1 ஏக்கர் நிலம் அப்பா சோனாசலத்திற்கு பாத்தியப்பட்டது ஆகும். அந்த 1 ஏக்கர் நிலம் எத்தனை சர்வே நம்பரில் இருந்தது என்றால் 3 சர்வே நம்பர்களில் இருந்தது. எனது வழக்குரையில் சோனாசலம், பழமலை, முத்துலிங்கம் ஆகியோர் இறந்த தேதிகளையோ அல்லது அவர்களுக்குள் குடும்ப சொத்துக்கள் தொடர்பாக எந்த தேதியில் பாகம் ஏற்பட்டது என்ற விவரத்தை எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி மூன்று நபர்களும் அவர்களுக்குள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் எனது வழக்குரையில் மேற்படி மூன்று நபர்களும் அவரவர்களுக்குள் எவ்வளவு பாகத்தை ஒதுக்கிக் கொண்டார்கள் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாவா வழக்கை பழமலை, திருவண்ணாமலை மற்றும் முத்துலிங்கம் ஆகியோர் 22.08.1932 ஆம் ஆண்டு சர்வே எண்.88/7 ஏக்கர் 0.30 சென்ட் உள்ளடக்கிய சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான்.

7. திருவண்ணாமலை என்பவர் இந்த குடும்பத்திற்கு சம்பந்தப்படாத மூன்றாம் நபர் என்றால் சரிதான். என்னுடைய வழக்குப்படி சர்வே எண். 88/7 ஏக்கர் 0.30 சென்டில் எனது தாத்தா பழமலைக்கு 9 சென்ட் என்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும். திருவண்ணாமலை மற்றும் முத்துலிங்கத்திற்கு தலா 9 சென்ட் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் மூவரும் வா.சா.ஆ.2 –ல் கண்ட சொத்துக்களில் தங்களுக்குள் எவ்வாறு 9 சென்ட் என பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியாது. பாகம் பிரித்துக்கொண்ட விவரம் பற்றி நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8. எனது வழக்குப்படி எனது தாத்தா பழமலையின் 9 சென்ட் நிலத்தில் மகன் சோனாசலம் மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கு தலா 4 1/2 சென்ட்

WWW.LIVELAW.IN

என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 9 சென்ட் சோனாசலம்(மகன்), அண்ணாமலை ஆகியோர் எந்த தேதியில் எவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரத்தை நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக சோனாசலம் மற்றும் அண்ணாமலை ஆகியோர் பெயரில் ஏற்பட்ட வருவாய்த்துறை ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் மகன் சோனாசலத்திற்கு பிரிந்த 4 1/2 சென்டில் அவரது வாரிசுகளான அசாலாம்பாள் மற்றும் சாலையம்மாள் ஆகியோர்களுக்கு தலா 2 1/4 சென்ட் பிரிந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர்களுக்குள் எந்த தேதியில் எவ்வாறு பாகம்பிரிந்தது என்ற விவரத்தை நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக அசலாம்பாள் பெயரிலோ அல்லது சாலையம்மாள் பெயரிலோ பட்டா எதுவும் ஏற்பட்டதாக ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. எனது வழக்குரைப்படி அசலாம்பாள் 2 1/4 சென்ட் நிலத்தை 08.06.1979 ம் தேதியிட்ட அறுதி ஆவணத்தின் மூலமாக எனக்கு எழுதி கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது பெயருக்கு அசலாம்பாளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட அறுதி ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 22.08.1932 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசலையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களுடைய அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகியவற்றின் அசல் என்னவாயிற்று என்று எனது வழக்குரையில் சொல்லாத காரணத்தினால் மேற்படி ஆவணங்களில் நகல் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

10. சோனாசலத்திற்கு 4 1/2 சென்டும் அண்ணாமலைக்கு 4 1/2 சென்டும் நிலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 9

செண்டில் மகன் சோனாசலத்திற்கு எந்தவித பங்கும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசலாம்பாளுக்கு உரிமை இல்லாத சொத்தை அவர் எனக்கு அறுதி ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தை எழுதிக் கொடுப்பதற்கு அசலாம்பாளுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்து யு.டி.ஆர் –க்கு பின் சர்வே எண்.88/7 இ ஹெக்டேர் 0.03.50 ஏர்ஸ் (0.09 சென்ட்) தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. 9 செண்டில் 2 1/4 சென்ட் அசலாம்பாள் இடமிருந்து பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் மீதி 6 3/4 சென்ட் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பஞ்சாயத்து மூலம் எனக்கு கிடைத்த 1 1/2 சென்ட் நிலத்திற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா அண்ணாமலைக்குரிய 4 1/2 சென்டில் எனக்கு வாரிசுபடி 1 1/2 சென்ட் நிலம் கிடைத்தது. நான் எனது வழக்குரையில் தாவா சொத்து 9 சென்ட் என குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எனக்கு 9 சென்ட் நிலம் கிடையாது ஆனால் எனது வழக்குரையில் 9 சென்டுக்காக வழக்கு தொடர்ந்து இருப்பதாக கூறியிருப்பது சரிதான்.

12. தாவா சொத்துக்கள் அல்லாமல் எனது தகப்பனார் மற்றும் சகோதரர்கள் மத்தியில் குடும்ப சொத்துக்களை எவ்வாறு எந்த தேதியில் பிரித்து கொண்டன் என்ற விவரத்தை நான் னஎனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் நாங்கள் எங்களுக்குள் சொத்துக்களை சரிசமமாக பிரித்துக் கொண்டோமா அல்லது ஈடுதாக்கலாக பிரித்துக் கொண்டோமா என்ற விவரத்தை நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் எங்களது சொத்தில் வால் கொல்லை உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது ஆனால் அதன் விஸ்தீரணம் 72 சென்ட் ஆகும். எனது அப்பா அண்ணாமலைக்கு பிரிந்த சொத்துக்கள் சர்வே எண். 88/7 இ, விஸ்தீரணம் 0.03.50 ஏர்ஸ், 186/1 ஏ 2–ல் 8 ஏர்ஸ், 186/1 பி2 –ல் 6 ஏர்ஸ், 93/4 பி ல் 4 ஏர்ஸ்;

DMANIKANDAN

93/4 டி–ல் 7 ஏர்ஸ், 93/4 ஏ –ல் 12 ஏர்ஸ், 186/1 ஏ 1–ல் 8 ஏர்ஸ், 186/1 பி1–ல் 10.50 ஏர்ஸ் ஆகியவை எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எங்களது குடும்பத்தில் சுமார் 1/2 காணி நஞ்சை நிலம் இருந்தது. மேற்படி நஞ்சை நிலத்தில் மகன் சோனாசலம் மற்றும் அவரது சகோதரர் அண்ணாமலைக்கு சரிசமமாக பாகம் பிரியவில்லை என்றால் சரிதான் நஞ்சை நிலத்தில் சோனாசலத்திற்கு சற்று கூடுதலாக ஒதுக்கப்பட்டதால தான் சர்வே எண். 88/7 இ–ல் 9 செனட் சோனாசலத்திற்கு பங்கு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்ப சொத்துக்களை எங்களுக்குள் நாங்கள் சரிசமமாக தான் பிரித்துக் கொண்டோம். வால் கொல்லை 72 சென்டில் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் சரிசமமாக பங்கு உண்டு .

13. வழக்கிற்காக வால் கொல்லையில் சகோதரர்களுக்குள் சரிசமாக பங்கு உண்டு என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இரன்டாம் பிரதிவாதி பொன்னுசாமி எனது உடன் பிறந்த மூத்த சகோதரர் ஆவார். பொன்னுசாமிக்கு சர்வே எண்.88/7 இ –ல் –6 1/2 சென்ட், 93/4 பி –ல் 4 ஏர்சில் 2 ஏர்ஸ், 186/1 ஏ 2 –0.8 ஏர்ஸ், 186/1 பி1–ல் – 5 1/4 ஏர்ஸ்,

14. எனக்கு 186/1 ஏ 1 0.8 ஏர்ஸ், 93/4 பி 4 ஏர்சில் 0.2 ஏர்ஸ், 186/1 பி1–ல் – 5 1/4 ஏர்ஸ், எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

15. சிற்றம்பலத்திற்கு 93/4 ஏ–வில் 12 ஏர்ஸ் சர்வே எண்.186/1 பி1 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.186/1 ஏ 1– 20 சென்டில் எனக்கு மட்டும் தான் உரிமை உண்டு மற்ற இருவருக்கும் பங்கு கிடையாது. வால் கொல்லையில் எனக்கும் சிற்றம்பலத்திற்கும் பங்கு கூடுதலாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அசலாம்பாள் எனக்கு அறுதி ஆவணம் மூலம் கிடைத்த சொத்தை நான் விற்பனை செய்யவில்லை.

16. எனது அண்ணன் 2 ம் பிரதிவாதி பொன்னுசாமி அவருடைய மகன் 1 ம் பிரதிவாதியான மணிவண்ணனுக்கு வா.சா.ஆ 6 மூலம் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த கிரையம் பற்றிய விவரம் நான் பெரம்பலூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பு

WWW.LAWYERSCLUBINDIA.COM

தான் எனக்கு தெரியும். நான் தாவா சொத்து தொடர்பாக வாங்கி பார்த்த வில்லங்க சான்றிதழை தான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தொடர்பாக இரண்டாம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ 6 பின்னிட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டதா என்ற விவரமும் எனக்கு தெரியாது. தாவா சொத்து இரண்டாம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்து பின்னிட்டு அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல தாவா சொத்து எனக்கு உரிமையான சொத்து இல்லை என்றாலும் எனது உடைமையிலும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்குரையில் தெரிந்தே பல உண்மைகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM